செய்தி வெளியீடு எண்: 02 நாள்: 05.10.2020

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 75 அம்மா நகரும் நியாய விலைக்கடைகளை தொடங்கி வைத்து, 178 பயனாளிகளுக்கு ரூ.3.88 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், நாகலாபுரம் ஊராட்சியில் இன்று (05.10.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் அம்மா நகரும் நியாய விலைக்கடைகளை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு கடனுதவிகளை வழங்கினார்.

தமிழக அரசு ஏழை, எளிய மக்களின் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காக எண்ணற்ற பல மக்கள் நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், தமிழக அரசு தமிழக மக்களின் அடிப்படை வாழ்வாதரத்திற்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிக்கு உத்திரவாதம் அளித்திடும் வகையில் உண்ண உணவிற்கு விலையில்லா அரிசியினையும், உடுத்தும் உடைக்கு விலையில்லா வேட்டி, சேலைகளையும், இருப்பிடத்திற்கு முதலமைச்சரின் சூரிய ஒளி சக்தியுடன் கூடிய பசுமை வீடு கட்டும் திட்டம், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்களை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மேலும், தமிழகத்தில் செயல்படும் 34,773 நியாயவிலைக் கடைகள் மூலம் 2.09 கோடி அட்டைதாரர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு போன்றவை அனைத்து அட்டைதாரர்களுக்கும் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் 517 நியாயவிலைக் கடைகள் மூலம் 4.10 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மாதந்தோறும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

பகுதிநேரக் கடைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லாத கிராமங்களில் குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்க நீண்ட தூரம் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு குடும்ப அட்டைதாரர்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் அமைக்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தாய்க்கடையில் இருந்து வாகனம் மூலம் நகர்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட நாட்களில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும். அன்றைய தினம் பொருட்களை வாங்க இயலாதவர்கள் மாதம் முழுவதும் தாய்கடையில் பெற்றுக்கொள்ளலாம். மாநில முழுவதும் 3501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5.37 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவார்கள்.

அதன்படி, தேனி மாவட்டத்திற்குட்பட்ட தேனி வட்டத்தில் - 11 கடைகளும், பெரியகுளம் வட்டத்தில் - 16 கடைகளும், ஆண்டிபட்டி வட்டத்தில் - 33 கடைகளும், போடிநாயக்கனூர் வட்டத்தில் - 7 கடைகளும் , உத்தமபாளையம் வட்டத்தில் - 8 கடைகளும் என மொத்தம் 75 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் அமைத்திட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில், இன்றயை தினம் அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 13,555 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவார்கள்.

மேலும், தமிழக அரசு, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஊரகப்பகுதியில் உள்ள மக்களுக்கு பல்வேறு கடன் வசதிகளை அளித்தும், சிறு குறு விவசாயிகளுக்கு கடன்களை வழங்கியும், நுகர்வோர் மற்றும் பொதுமக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குரிய சேவை ஆற்றியும், மகத்தான சாதனைகளை புரிந்து வருகிறது. கூட்டுறவு சங்கங்களின் மூலம் பயிர் கடன், நகை ஈட்டின் பேரில் பயிர் கடன், உரம், விதை உள்ளீட்ட வேளாண் இடுபொருட்கள் விற்பனை, வேளாண் விளை பொருட்கள் சந்தைப்படுத்துதல், உதவிக்குழுக்கள், கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு கடன் வழங்குதல், டாப்செட்கோ, டாம்கோ திட்டங்களின் கீழ் கடன் வழங்குதல், மத்திய காலக்கடன்கள் வழங்குதல் உள்ளீட்ட பலத்திட்டங்களின் மூலம் ஊரகப் பொருளாதாரம் மேம்படவும், வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கை தரம் உயரவும், எண்ணற்ற திட்டங்கள் அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டத்தில் இயங்கி வரும் 80 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கும் பணி செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளால் பெறப்பட்ட 31.03.2016 அன்று வரை நிலுவையிலிருந்த 12,488 உறுப்பினர்களின் வேளாண் கடன் நிலுவைத் தொகை ரூ.85.51 கோடி மதிப்பீட்டில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தவணைத் தேதிக்குள் பெற்ற பயிர்கடன் தொகையை திருப்பி செலுத்தும் விவசாயிகள் இக்கடனுக்குரிய 7 விழுக்காடு வட்டியினை சங்கத்திற்கு செலுத்த வேண்டியதில்லை. மேலும் அத்தொகைக்கான வட்டியினை அரசே சங்கத்திற்கு செலுத்துகிறது. இதன் மூலம் விவசாயிகள் கட்ட வேண்டிய விவசாயிகளுக்கான வட்டி சுமையினை தமிழக அரசே ஏற்று, தேனி மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் சுமையை வெகுவாக குறைத்து வருகிறது.

அதனடிப்படையில், கூட்டுறவுத்துறையின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழ கடன் திட்டத்தின் கீழ் (5 குழுக்கள்) 54 பயனாளிகளுக்கு ரூ.17,85,000/- மதிப்பீட்டிலும், கொதுவை கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.8,40,000/- மதிப்பீட்டிலும், மத்திய காலக்கடன் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.2,50,000/- மதிப்பீட்டிலும், பயிர் கடன் திட்டத்தின் கீழ் 90 பயனாளிகளுக்கு ரூ.99,09,223/- மதிப்பீட்டிலும், பணியாளர் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் மத்திய காலக்கடன் திட்டத்தின் கீழ் 27 பயனாளிகளுக்கு ரூ.2,60,50,000/- கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 178 பயனாளிகளுக்கு ரூ.3,88,34,223/- மதிப்பீட்டிலான கடனுதவிகள் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட ஊராட்சித்தலைவர் க.பிரிதா, மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் எம்.ஏகாம்பரம், மத்திய கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் அ.ஜீவா, மாவட்ட வழங்கல் அலுவலர் (பொ) ம.சிவசுப்பிரமணியன், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் எம்.எஸ்.பாண்டியன், தேனி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் ஜி.ஜெயலட்சுமி கணேசன், உத்தமபாளையம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தலைவர் பி.ஆர்.பி.அழகர் ராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.எம்.சையதுகான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**